museum of modern
and contemporary art
sri lanka

# Quarterly Newsletter #10 – January 2025

1 டிசம்பர் 2024 அன்று முடிவடைந்த ‘முழு நில அமைப்பு’ கண்காட்சியின் முதலாவது சுழற்சியின்போது 4,853 பார்வையாளர்களை வரவேற்றதில், MMCA இலங்கை மகிழ்ச்சி அடைகிறது. 12 செப்டம்பர் 2024 அன்று சுழற்சி தொடங்கியதிலிருந்து, எங்கள் வருகையாளர்களில் 244 பேர் பள்ளி மற்றும் உயர்கல்வி நிலைய மாணவர்களாகவும், 243 பேர் நாங்கள் நடாத்திய 18 பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களாகவும் இருந்தனர்.

MMCA இலங்கையானது, பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டத்தின் கூட்டாண்மையுடன் ஒழுங்குபடுத்திய, உரையாடல் மற்றும் குடிசார் ஊடாடல் தோழமைத்திட்டத்தின் மாணவ உறுப்பினர்களால் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைத் தொடரானது சிறப்பு முக்கியத்துவத்தினை பெற்றது. கல்யாணி சுந்தரலிங்கம், தமிழினி சித்திரவடிவேல், பவநீதா லோகநாதன் ஆகியோரால் வழிநடத்தப்பட்டு நடைபெற்ற இந்த 14 பட்டறைகளும், இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் சமூக நிலப் பிணக்குகளின் மூல காரணங்களை கலையின் மூலம் ஈடுபட்டு புரிந்துகொள்ள பங்கேற்பாளர்களுக்கு அழைப்பு விடுத்தன. இப் பயிற்சிப்பட்டறைகள், ‘முழு நில அமைப்பு’ கண்காட்சிக்காக MMCA இலங்கையினால் பணிக்கப்பட்ட ஜாஸ்மின் நிலானி ஜோசப்பின் (பி.1990) ‘DS Waiting Room’ (2024), அனோமா ராஜகருணாவின் (பி.1965) ‘No Other Land’ (2024), ஹனுஷா சோமசுந்தரத்தின் (பி.1988) ‘நகரும் நிலங்கள்’ (2024) ஆகிய படைப்புகளுடன் ஊடாடின.

‘முழு நில அமைப்பு’ கண்காட்சியின் சுழற்சி 2, டிசம்பர் 15 அன்று திறக்கப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த ஒன்பது சமகால கலைஞர்களின் படைப்புகளைக் கொண்ட இந்தக் கண்காட்சியானது, இலங்கையில் நிலப்பரப்புகள் மாற்றமடைந்துள்ள பரந்த, சடுதியான, கிளர்த்தும் பாங்கான வழிகளை ஆராய்வதினை தொடர்கிறது. கண்காட்சியில் இடம்பெற்றுள்ள கலைஞர்கள்: அப்துல் ஹாலிக் அஸீஸ் (பி.1985), சந்திரகுப்த தேனுவர (பி.1960), தனுஷ்க மாரசிங்க (பி.1985), டொமினிக் சான்சோனி (பி.1956), ஜாஸ்மின் நிலானி ஜோசப் (பி.1990), கோரலேகெதர புஷ்பகுமார (பி.1968), பால பொ(த்)துபிட்டிய (பி.1972), பிரதீப் தலவத்த (பி.1979), மற்றும் தா. சனாதனன் (பி.1969).

‘முழு நில அமைப்பு’ கண்காட்சியின் இரண்டாவது சுழற்சியின் பார்வையாளர்கள், இரண்டு ஊடாடும் கலைப்படைப்புக்களுடன் ஈடுபட அழைக்கப்படுகின்றனர். அவற்றில், பிரதீப் தலவத்தவின் முதல் முறையாக காட்சிப்படுத்தப்படுகின்ற ‘You came to see me, and now

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

I'm here' (2023) கலைப்படைப்பும் ஒன்றாகும். தா. சனாதனனின், 2014 இல் ஷார்ஜா பியனாலேயில் முதன்முதலில் காட்சிப்படுத்தப்பட்ட 'Drawers of War Transactions' (2019), இனுடைய முந்தைய வடிவமே மற்றைய ஊடாடும் படைப்பாகும். இது இலங்கையில் முதல் முறையாக காட்சிப்படுத்தப்படுகிறது. 2 மார்ச் அன்று இச்சுழற்சி முடிவடைவதற்கு முன்பு, இப் படைப்புகளைப் பார்வையிட, கிரெஸ்கட் புலோவார்டின் தரை தளத்தில் உள்ள அருங்காட்சியகத்திற்குச் வருகை தாருங்கள்!

எங்களுடைய வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுக்காக பாடல்குழு இயக்குநர் ஹரின் அமிர்தநாதன் இயக்கிய பரி தோமாவின் முன்னிலைப் பாடசாலையின் பாடல் குழுவின் நிகழ்ச்சியினை நடாத்தியதில் மகிழ்ச்சி அடைந்தோம். இப்பாடல்குழுவானது 'முழு நில அமைப்பு' கண்காட்சிக்குத் துலங்கலாக இப் பண்டிகைக்காலத்தின் மகிழ்ச்சியை மேலும் அதிகரித்தது.